**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**முன்னிலை: செல்வி.A. யுகாதிமரியா, B.Com.L.L.B(Hons.,)**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை.**

**2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 06 ம் நாள் திங்கள்கிழமை**

**அசல் வழக்கு எண்.54/2014**

**இ.ம.எண்.06/2025**

கமலம் **...மனுதாரர்/வாதி**

**/எதிர்/**

1) அலமேலு
2) சரவணன்
3) மாவட்ட ஆட்சித்தலைவர், கரூர்
4) வட்டாட்சியர், குளித்தலை
5) கிராம நிர்வாக அலுவலர்,
மருதுார் வடக்கு II கிராமம்
6) ராஜ்குமார்
7) தங்கதுரை
8) லோகாம்பாள்
9) பேபி
10) சரவணன்
11) சாவித்திரி
12) பொன்மணி
13) மஞ்சுளா **..எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்**

**(I.A.No. 7/2025 ல் 03.03.2026 ம் தேதி உத்தரவுப்படி திருத்தப்பட்டது)**

இம்மனு எனது முன்னிலையில் கடந்த 27.03.2026ம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.விஜயக்குமார் அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்ட நிலையிலும், 2, 6 மற்றும் 7ம் எதிர்மனுதாரர்கள் மற்றும் 1 முதல் 3 வரையான உத்தேச தரப்பினர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்

திரு.B.மலர்கண்ணன் அவர்கள் முன்னிலையாகியும் மற்றும் 3 முதல் 5 வரையான எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் திரு.K.S.M.சாகுல் ஹமீது அவர்கள் முன்னிலையாகியும் மற்றும் இரு தரப்பு வாதங்களைக் கேட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்:

**உத்தரவு**

இம்மனுவானது, உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 22, விதி 4 உடனிணைந்த பிரிவு 151ன் கீழ் இறந்து போன 1ம் பிரதிவாதியின் வாரிசுகளை மேற்படி அசல் வழக்கில் பிரதிவாதிகளாக சேர்க்க உத்தரவு பிறப்பிக்க வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2)** 3 முதல் 5 வரையான எதிர்மனுதாரர்கள் தரப்பில் முன்னிலையாகிய கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் மேற்படி 3 முதல் 5 வரையான எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிர்மனுவுரை இல்லை என்று இந்நீதிமன்றத்தில் குறிப்பு செய்துள்ளார்.

**மனுதாரர் மனுவின் சுருக்கம்:**

**3)** மனுதாரர் மேற்படி அசல் வழக்கின் வாதியாவார். மேற்படி அசல் வழக்கில் 1ம் பிரதிவாதி அலமேலு என்பவர் கடந்த 24.10.2025ம் தேதி இறந்து விட்டார். மேற்படி அலமேலு என்பவருக்கு லோகாம்பாள் மற்றும் பேபி என்ற இரண்டு மகள்கள் உள்ளார்கள். மேற்படி அலமேலுவின் மகன் செல்வம் ஏற்கெனவே இறந்துவிட்டார். மேற்படி செல்வத்திற்கு சரவணன் என்ற மகன் உள்ளார்.

**4)** மேற்படி நபர்களே இறந்து போன அலமேலுவின் வாரிசுதாரர்கள் ஆவார்கள். மேற்படி நபர்களை தவிர வேறு இதர வாரிசுகள் யாரும் கிடையாது. மேற்படி நபர்களே இறந்து போன அலமேலுவின் சொத்துக்களை அடைந்து

அனுபவித்து வருகிறார்கள். மேற்படி உத்தேச தரப்பினர்களான அலமேலுவின் வாரிசுகளை மேற்படி அசல் வழக்கில் 8 முதல் 10 வரையான பிரதிவாதிகளாக சேர்க்க வேண்டி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, இம்மனுவை அனுமதிக்க வேண்டியது நீதியின் பொருட்டு நியாயமானதாகவும், அவசியமானதாகவும் உள்ளது.

**2ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 6 மற்றும் 7ம் எதிர்மனுதாரர்களாலும், 1 மற்றும் 2ம் உத்தேச தரப்பினர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்மனுவுரையின் சுருக்கம்:**

**5)** மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனு தவறானது. மனுவில் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதல்ல. மனுதாரரின் மனு எடுத்த எடுப்பிலே தள்ளுபடி செய்யத்தக்கது ஆகும். மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு மற்றும் பிரமாண வாக்கு மூலத்தில் கூறியுள்ள சங்கதிகளில் இந்த 2ம் எதிர்மனுதாரர் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர மற்றவற்றை இந்த மனுதாரரே நிரூபிக்கக் கடமைப்பட்டவர் ஆவார்.

**6)** மனுதாரர் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் 1ம் பிரதிவாதி, கடந்த 24.10.2025ம் தேதி இறந்துவிட்டார் என்றும், மேற்படி அலமேலுக்கு லோகாம்பாள், பேபி என்ற இரண்டு மகள்கள் உள்ளார்கள் என்றும், மேற்படி நபர்களே இறந்து போன அலமேலுவின் வாரிசுகள் என்றும், மேற்படி நபர்களை தவிர வேறு வாரிசுகள் யாரும் கிடையாது என்றும், மேற்படி நபர்களை இறந்து போன அலமேலுவின் சொத்துக்களை அடைந்து அனுபவித்து வருகிறார்கள் என்றும், மேற்படி உத்தேச தரப்பினர்களான வாரிசுதாரர்களை மேற்படி அசல் வழக்கில் 8 முதல் 10 வரையான பிரதிவாதிகளாக சேர்க்க வேண்டியுள்ளது என கூறியுள்ளது யாதும் தவறாகும். அவற்றை மனுதாரரே நிரூபிக்கக் கடமைப்பட்டவர் ஆவார்.

**7)** 1ம் பிரதிவாதி கடந்த 24.10.2025 அன்று இறந்துவிட்டார் என்பது உண்மை. ஆனால், மனுதாரர் மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ள வாரிசுதாரர்களின் விவரம் தவறு. உண்மையில் இறந்து போன 1ம் பிரதிவாதிக்கும், அவருடைய கணவர் கொடியரசுக்கும், லோகாம்பாள், பேபி என்ற இரண்டு மகள்களும் செல்வக்குமார் என்ற மகனும் வாரிசுதாரர்கள் ஆவார்கள். மேற்படி கொடியரசு மற்றும் செல்வக்குமார் இவ்வழக்கிற்கு முன்பாகவே இறந்துவிட்டார்கள். மேற்படி இறந்து போன செல்வக்குமாருக்கு சாவித்ரி என்ற மனைவியும், சரவணன் என்ற மகனும், பொன்மணி, மஞ்சுளா ஆகிய மகள்களும் உள்ளார்கள். எனவே, இறந்து போன 1ம் பிரதிவாதிக்கு மேற்படி லோகாம்பாள், பேபி, சாவித்ரி, சரவணன், பொன்மணி மற்றும் மஞ்சுளா ஆகியோர்கள் சட்ட முறையான வாரிசுதாரர்கள் ஆவார்கள். மேற்படி, சரவணன் என்பவர் அசல் வழக்கில் ஏற்கெனவே 2ம் பிரதிவாதியாக உள்ளார். மேற்படி 2ம் பிரதிவாதி சரவணன் என்பவரை மீண்டும் இறந்து போன 1ம் பிரதிவாதிக்கு வாரிசாக சேர்க்க வேண்டிய விவரத்தில் 3வது உத்தேச நபராக சேர்க்கப்பட்டுள்ளது சட்டப்படி தவறாகும்.

**8)** மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள இதர சங்கதிகள் மறுக்கப்படுகின்றன. இந்த எதிர்மனுதாரர் தரப்பில் பின்னர் தேவைப்படும் பட்சத்தில் கூடுதல் எதிர்மனுவுரை தாக்கல் செய்யப்படும் உரிமையை இதன்மூலம் தக்க வைத்துக்கொள்கிறார். எனவே, இம்மனுவானது இந்த எதிர்மனுதாரரின் எதிர்மனுவுரையை ஏற்று எதிர்மனுதாரர்களின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கதாகும்.

**<u>தீர்மானிக்கப்பட வேண்டிய கேள்வி:</u>**

**9)** மனுதாரரின் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய கேள்வியாகும்.

**<u>சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u>**

**10)** இரு தரப்பிலும் வாய்மொழி சாட்சியமும் இல்லை. ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**<u>தீர்வு:</u>**

**11)** இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்கு கோப்புகள் பரிசீலிக்கப்பட்டன. வழக்கு கோப்புகளைப் பரிசீலனை செய்கையில், மேற்படி அசல் வழக்கானது மனுதாரர்/வாதியால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா சொத்தைப் பொறுத்து நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரத்திற்காகவும், தாவா 'ஆ' அட்டவணை சொத்தைப் பொறுத்து உரிமை விளம்புகை பரிகாரத்திற்காகவும் மற்றும் செயலுறுத்துக் கட்டளை பரிகாரத்திற்காகவும் மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது. இந்நிலையில், மேற்படி அசல் வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில் 1ம் பிரதிவாதியாகிய அலமேலு என்பவர், கடந்த 24.10.2025 அன்று இறந்துவிட்டதாக கூறி, வாதி தரப்பில் முன்னிலையாகிய கற்றறிந்த வழக்கறிஞரால் குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது.

**12)** அதனைத் தொடர்ந்து, மேற்படி இறந்து போன 1ம் பிரதிவாதியின் வாரிசுதாரர்களை மேற்படி அசல் வழக்கில் பிரதிவாதிகளாக சேர்க்க வேண்டிய இம்மனுவானது, மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது. மனுதாரர் மனுவில் 1ம் பிரதிவாதியாகிய அலமேலு என்பவர் கடந்த 24.10.2025 அன்று இறந்துவிட்டார் என்றும், அவருக்கு லோகாம்பாள், பேபி என்ற இரு மகள்கள் உள்ளார்கள் என்றும், அவரது ஒரே மகனான செல்வம் என்பவர் ஏற்கெனவே இறந்துவிட்டார் என்றும், மேற்படி செல்வத்திற்கு இவ்வழக்கின் 2ம் பிரதிவாதியாகிய சரவணன் என்ற மகனும், மேலும் அவரது

மனைவி மற்றும் இரண்டு மகள்களும் உள்ளார்கள் என்றும், இறந்து போன சரவணனுக்கு பாத்தியப்பட்ட சொத்தைப் பொறுத்து அவரது வாரிசுகள் மேற்படி சொத்துக்களை அடைந்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்றும், அதனால் இறந்து போன 1ம் பிரதிவாதியின் வாரிசுகளாக மனுவில் கண்ட உத்தேச தரப்பினர்களை மேற்படி அசல் வழக்கில் பிரதிவாதிகளாக சேர்க்க வேண்டியது நீதியின் பொருட்டு நியாயமும், அவசியமும் ஆகும் என்றும், எனவே, இம்மனுவை அனுமதிக்க வேண்டும் என வாதிடப்பட்டது.

**13)** மாறாக, 2, 6, 7ம் எதிர்மனுதாரர்கள் மற்றும் 1 மற்றும் 2ம் உத்தேச தரப்பினர்களாலும் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்மனுவுரையில், 1ம் பிரதிவாதி, கடந்த 24.10.2025 அன்று இறந்து விட்டார் என்பது உண்மை என்றும், ஆனால் 1ம் பிரதிவாதிக்கு செல்வக்குமார் என்ற மகன் இருந்தார் என்றும், 1ம் பிரதிவாதியின் கணவரும் மேற்படி செல்வக்குமாரும் இவ்வழக்கிற்கு முன்பாகவே இறந்து விட்டார்கள் என்றும், தற்போது செல்வக்குமாருக்கு சாவித்ரி என்ற மனைவியும் சரவணன் என்ற மகனும், பொன்மணி, மஞ்சுளா ஆகிய இரு மகள்களும் உள்ளார்கள் என்றும், ஆனால் மேற்படி சரவணன் என்பவர் ஏற்கெனவே மேற்சொன்ன அசல் வழக்கில் 2ம் பிரதிவாதியாக வாதியால் சேர்க்கப்பட்டுள்ள நிலையில், மீண்டும் இம்மனுவில் 3ம் உத்தேச தரப்பினராக தவறுதலாக மனுதாரர்/வாதியால் சேர்க்கப்பட்டுள்ளார் என்றும், எனவே, மேற்சொன்ன காரணங்களுக்காக இம்மனு எதிர்மனுதாரர்களின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கது என்றும் கூறப்பட்டுள்ளது.

**14)** இரு தரப்பு வாதங்களையும், வழக்கு கோப்புகளையும் பரிசீலனை செய்கையில், மேற்படி அசல் வழக்கு நிலுவையில் இருந்த சமயம் 1ம் பிரதிவாதி அலமேலு என்பவர் இறந்துவிட்ட நிலையில், அவரது வாரிசுகளாகிய அவரது மகள்கள் மற்றம் அவரது இறந்து போன மகனின் மனைவி மற்றும் மகள்களை மேற்படி அசல் வழக்கில் 1ம் பிரதிவாதியின் வாரிசுகளாக காண்பித்து அவர்களை

பிரதிவாதிகளாக சேர்க்கக் கோரி இம்மனுவானது மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது. இந்நிலையில், இறந்து போன 1ம் பிரதிவாதியின் வாரிசுகளாகிய உத்தேச தரப்பினர்கள், இறந்து போன 1ம் பிரதிவாதி விட்டுச் சென்ற சொத்தை அடைந்து அனுபவம் செய்து வருவதாக மனுதாரர்/வாதியால் ஒப்புக்கொண்டு கூறியுள்ள நிலையில், மேற்படி 1ம் பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள மேற்படி அசல் வழக்கில், 1ம் பிரதிவாதி தரப்பில் அவரது சட்ட முறையான வாரிசுகளை அவசிய தரப்பினர்களாக சேர்க்கப்படவேண்டும் என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேலும், மேற்படி அசல் வழக்கில் இரு தரப்பினர்களுக்கும் தகுந்த வாய்ப்புக்கள் அளித்து பின்பு இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படும் தீர்ப்பானது, இறந்து போன 1ம் பிரதிவாதியின் வாரிசுகளையும் கட்டுப்படுத்தும் என்பதால், இறந்து போன 1ம் பிரதிவாதியின் வாரிசுகளாகிய மனுவில் கண்ட உத்தேச தரப்பினர்களை மேற்கண்ட அசல் வழக்கில் பிரதிவாதிகளாக சேர்ப்பது நீதியின் பொருட்டு அவசியமும், நியாயமுமாய் உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**15)** இந்நிலையில், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் முன்னிலையாகிய கற்றறிந்த வழக்கறிஞர் கூறியுள்ளது போல், மனுதாரர்/வாதி இம்மனுவில் 1ம் பிரதிவாதியின் இறந்து போன மகனின் மகனாகிய சரவணன் என்பவர், மேற்படி அசல் வழக்கில் 2ம் பிரதிவாதியாக இருந்தாலும், மீண்டும் இம்மனுவில் 3ம் உத்தேச தரப்பினராக காண்பித்து அவரையும் மேற்படி அசல் வழக்கில் மீண்டும் தரப்பினராக சேர்க்க சொல்லி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்பதை அறிய முடிகின்றது. இந்நிலையில், கடந்த 23.03.2023 அன்று இம்மனு நிலுவையில் இருந்த சமயத்தில், மனுதாரர் தரப்பில் முன்னிலையாகிய கற்றறிந்த வழக்கறிஞரால் இம்மனுவில் 2ம் பிரதிவாதியாக உள்ள சரவணன் என்பவரை 3வது உத்தேச தரப்பினராக காண்பித்து தவறுதலாக சேர்க்கப்பட்டுள்ளது என்றும், 3ம் உத்தேச தரப்பினராகிய சரவணன் என்பவரது பெயர் மற்றும் விலாசத்தை நீக்கி உத்தரவிட

வேண்டுமென்றும் ஒரு குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்ததில், இறந்து போன 1ம் பிரதிவாதியின் இறந்துபோன மகனின் மகனாகிய சரவணன் என்பவர் ஏற்கெனவே மேற்படி அசல் வழக்கின் 2ம் பிரதிவாதியாக உள்ள நிலையில், அவரை மீண்டும் 3ம் உத்தேச தரப்பினராக காண்பித்து இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெரிகிறது. இந்நிலையில், மேற்படி சரவணன் என்பவர் ஏற்கெனவே 2ம் பிரதிவாதியாக மேற்படி அசல் வழக்கில் உள்ள நிலையில், அவரை மீண்டும் உத்தேச தரப்பினராக காண்பிக்க அவசியம் இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே, நீதியின் நலன் கருதி மனுதாரர்/வாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, மனுதாரரால் இம்மனுவில் 3வது உத்தேச தரப்பினராக காண்பிக்கப்பட்டுள்ள சரவணன் என்பவரது பெயர் மற்றும் விலாசத்தை நீக்கரவு செய்ய இதன்மூலம் நீதியின் பொருட்டு இந்நீதிமன்றம் உத்தரவிடுகின்றது.

**முடிவாக,**

மேற்சொன்ன காரணங்களுக்காக, இம்மனுவானது அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகின்றது. இம்மனுவில் மனுதாரரால் காண்பிக்கப்பட்டுள்ள 3ம் உத்தேச தரப்பினராகிய சரவணன் என்பவர் பெயர் மற்றும் விலாசத்தை நீக்கரவு செய்து, மேற்படி அசல் வழக்கில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ள மனுதாரருக்கு இதன்மூலம் அறிவுறுத்தப்படுகின்றது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவானது, என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் குறிப்பு எடுக்கப்பட்டு, பின்பு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில்

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 06ம் தேதியாகிய இன்று அவையறிய பகிரப்பட்டது.

YUGHATHY MARIYA
Digitally signed by YUGHATHY MARIYA
Date: 2026.04.06 15:15:51 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**குளித்தலை**

மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

YUGHATHY MARIYA
Digitally signed by YUGHATHY MARIYA
Date: 2026.04.06 15:15:57 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**குளித்தலை**